# காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் - 2023

## 11ஆம் வகுப்பு – பொதுத்தமிழ் – விடைக்குறிப்பு - நாமக்கல் மாவட்டம்

**பகுதி – I** 14×1=14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆ) பாயிரம் | 1 | 8 | இ) ஊருக்கு உதவுவது | 1 |
| 2 | ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக | 1 | 9 | இ) 27 | 1 |
| 3 | இ) பேயனார் | 1 | 10 | ஆ) எண்ணும்மை | 1 |
| 4 | அ) மார்ச் 20 | 1 | 11 | ஈ) நற்றிணை | 1 |
| 5 | ஈ) பனை | 1 | 12 | i) அ, ஆ, இ – சரி; ஈ - தவறு | 1 |
| 6 | அ) கூற்றும் சரி விளக்கமும் சரி | 1 | 13 | அ) iii, i, iv, ii | 1 |
| 7 | ஆ) ஃபாரன்ஹீட் 451 | 1 | 14 | ஆ) ஆசிரியர்கள், மாணவர்கள் | 1 |

**பகுதி – II - பிரிவு -1** 3×2=6

| | | |
|---|---|---|
| 15 | ❖ காற்றின் தீராத பக்கங்களில், சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று, ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது. | 2 |
| 16 | ❖ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. அகத்திணை சார்ந்த 401 பாடல்களைக் கொண்டது.<br>❖ இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ. இந்நூல் நல்ல குறுந்தொகை எனச் சிறப்பிக்கப்படுகிறது<br>**(எவையேனும் இரண்டு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 |
| 17 | ❖ வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு. | 2 |
| 18 | ❖ மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர்.<br>❖ இது, படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. | 1<br>1 |

**பிரிவு – 2** 2×2=4

| | | |
|---|---|---|
| 19 | ❖ ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர். **(எ.கா.)** பனங்கற்கண்டு, கருப்பட்டி | 2 |
| 20 | ❖ "சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது. தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்பது மா. இராசமாணிக்கனாரின் கூற்றாகும். | 2 |
| 21 | ❖ 08.06.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர் பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும் தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார் | 2 |

**பிரிவு – 3** 7×2=14

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | ❖ உவமைத்தொடரில் உவமை முன்னும், உவமேயம் பின்னும் அமையும்.<br>**எ.கா.:** வெள்ளம் போன்ற கண்ணீர்.<br>❖ உருவகத்தொடரில் உவமேயம் முன்னும், உவமை பின்னும் அமையும். **எ.கா.** - கண்ணீர்வெள்ளம் | | | 1<br>1 |
| 23 | **அ) வாழ்வான்**<br>வாழ்வான் = வாழ் + வ் + ஆன்<br>வாழ் – பகுதி;<br>வ் - எதிர்கால இடைநிலை;<br>ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | அல்லது | **ஆ) பிரிந்தோர் - பிரி + த்(ந்) + த் + ஓர்**<br>பிரி - பகுதி<br>த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி | 1<br>1 |
| 24 | **ஆ) பூஞ்சோலை = பூ + சோலை**<br>விதி 1: பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும். | அல்லது | **அ) செங்கயல் = செம்மை + கயல்**<br>விதி 1: ஈறுபோதல்<br>விதி 2: முன்னின்ற மெய் திரிதல் | 1<br>1 |
| 25 | ❖ தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள்; நேரம் கடந்து சென்றால் பதற்றமாகிவிடும். | | | 2 |
| 26 | ❖ போரில் வீரன் எய்த கணை பட்டதும் குதிரை கனைத்தது.<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | | 2 |
| 27 | ❖ கல்வித் கேள்விகளில் சிறந்தவர் நன்மை_ தீமைகளைப் புரிந்து பேசுவர். | | | 2 |
| 28 | **தங்கை:** தங்கை: எனக்கு ஒரு தங்கை உண்டு.<br>தம் கை: தம் கையே தமக்கு உதவி என்பது பழமொழி. **(அல்லது)**<br>**வைகை:** வைகை: மதுரையில் வைகை நதி பாய்கிறது.<br>வை கை: மையைத் தொட்டு வை கையாலே.<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | | 1+1 |
| 29 | ❖ திணை, பால், எண், இடம் | | | 2 |
| 30 | ❖ அ) Migration - புலம்பெயர்தல் ஆ) Culture - பண்பாடு | | | 1+1 |

**பகுதி – III - பிரிவு -1** 2×4=8

| | | |
|---|---|---|
| 31 | **நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவன,**<br>❖ நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை.<br>❖ நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர்.<br>❖ யாப்பு முறை, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர், நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன். | 1<br>1<br>1 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ நூலின் காலம், களம், காரணம் ஆகிய செய்திகள் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் குறிப்பிடுகிறது. | 1 |
| 32 | ❖ காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு தூக்கணாங்குருவிக் கூடுகள். **(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>3 |
| 33 | **தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து**<br>❖ உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.<br>❖ காவடி, தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று. தமிழ்நாட்டில் பண்டைய காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபைக் காவடிச்சிந்து எனலாம்.<br>❖ முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டு பொருள்களைக் கொண்டு செல்வோர் ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.<br>❖ அவர்களின் வழிநடைப் பாடல் வகையிலிருந்து காவடிச்சிந்து என்னும் பாவடிவம் தோன்றியது. | 1<br>1<br>1<br>1 |
| 34 | **ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**<br>❖ **இடம்:** இவ்வடி, போதனார் எழுதிய நற்றிணைப் பாடலில் இடம் பெற்றுள்ளது.<br>❖ **பொருள்:** 'நான் உண்ணேன்' என மறுக்கும் இச்சிறுவிளையாட்டுப் பெண் இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறைகளையும் எப்படிக் கற்றாள்?<br>❖ **விளக்கம்:** "நம் வீட்டில் பொற்கிண்ணத்தில் ஏந்திய தேன் கலந்த பால் உணவை வேண்டாம் என மறுத்தவள் நம் மகள். தற்போது, தான் மணந்துகொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பார்க்காமல், கிடைக்கும் உணவினை ஒருபொழுது மட்டும் உண்டு வாழும் இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறைகளையும் எப்படிக் கற்றாள்?" எனச் செவிலித்தாய், நற்றாயிடம் கூறுகிறாள் | 1<br>1<br>2 |
| | பகுதி – III - பிரிவு -2 | 2×4=8 |
| 35 | **வாளினும் வலிமை பெற்றது மொழி**<br>❖ மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின்மீது எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன்.<br>❖ குழந்தையாக இருந்தபோது, "அம்மா, அம்மா" என்று அழைப்பேன். வேலையில் மூழ்கிய அம்மா, என்னைக் கவனியாதபோது திடீரென்று அவரது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன்.<br>❖ அவர் திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறார். அப்போதுதான் என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின்மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.<br>❖ இதன்மூலம் வாளினும் வலிமையானது மொழி என்பதை உணர்ந்துகொண்டேன். | 1<br>1<br>1<br>1 |
| 36 | **'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது'**<br>❖ மனித சமூகத்தின் ஆதிநிலம் மலை.<br>❖ "சேயோன் மேய மைவரை உலகம்" - தொல்காப்பியம்.<br>❖ "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ" - திருமுருகாற்றுப்படை.<br>❖ மலை நிலத்தைத் தமிழ் இலக்கியம் 'குறிஞ்சி' என்றே குறிப்பிடுகிறது.<br>❖ கமில் சுவலபில், திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்கிறார்.<br>❖ இந்தியப் பழங்குடியினரின் பெயர்கள் மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.<br>❖ பழங்குடியினர் உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறு, ஓடைகளை ஒட்டிக் குடியிருப்பை அமைத்துள்ளனர்.<br>❖ அவை பழங்குடியினரின் மலைசார்ந்த சமூக சமயக் கூறுபாடு சார்ந்த புரிதலைத் தருகின்றன.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 |
| 37 | **தமிழ் இலக்கியங்களில் கல்வி** | |

| | | | |
|---|---|---|---|
| 1 | தொல்காப்பியம் | கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வது ஓதல் பிரிவு.<br>கல்வியின் பொருட்டு பெருமிதம் தோன்றும் (மெய்ப்பாட்டியல்). | 1 |
| 2 | நன்னூல், தொல்காப்பியம் | ஆசிரியர்கள் மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன. | 1 |
| 3 | புறநானூறு | பொருள் கொடுத்தும், தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்றல் சிறப்பு. | 1 |
| 4 | திருமந்திரம் | துணையாய் வருவது தூய நற்கல்வி. | 1 |
| 5 | நாலடியார் | கல்வி அழகே அழகு. | |
| 6 | ஔவையார் | இளமையில் கல். | |

**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)**

| | | |
|---|---|---|
| 38 | **ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர்**<br>❖ ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் ஆண்டு, திங்கள், கிழமை, நேரம் இவற்றைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.<br>❖ பிரெஞ்சு கப்பல் தளபதி லெபூர்தொனே 1746 இல் சென்னையைக் கைப்பற்றியது.<br>❖ சினமுற்ற ஆற்காடு நவாபு மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டது.<br>❖ தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு படையெடுப்பு;<br>❖ புகழ்பெற்ற ஆம்பூர் போர்; தஞ்சைக் கோட்டை முற்றுகை;<br>❖ இராபர்ட் கிளைவ் படையெடுப்பு, ஆங்கிலேயேரின் புதுச்சேரி முற்றுகை.<br>❖ போன்ற தகவல்கள் ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதற்குச் சான்றாகும்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

| | | |
|---|---|---|
| | **பகுதி – III - பிரிவு -3** | **3×4=12** |
| 39 | **அ) வேற்றுமை அணி**<br>❖ **அணி இலக்கணம்:** செய்யுளில் இரு பொருள்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி ஆகும்.<br>❖ **சான்று:** தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினால் சுட்ட வடு.<br>❖ **விளக்கம்:** தீயினால் ஏற்பட்ட காயம் உடம்பினுள்ளே ஆறிவிடும். தீச்சொல்லால் ஏற்பட்ட மனக்காயம் ஆறாத வடுவாக இருக்கும்.<br>❖ **அணிப் பொருத்தம்:** ஒற்றுமை : தீயும் சுடும் தீச்சொல்லும் சுடும்.<br>வேற்றுமை: தீக்காயம் ஆறிவிடும்.தீச்சொல்லால் ஏற்பட்ட மனக்காயம் ஆறாது. | 2<br>1<br>1 |
| | **(அல்லது)** | |
| | **ஆ)** மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்<br>பெருந்தகை யான்கண் படின்.<br>❖ **அணிச் சுட்டல்:** உவமை அணி<br>❖ **அணி விளக்கம்:** செய்யுளில் உவமை, உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.<br>❖ **அணிப் பொருத்தம்**: உவமை: மருந்தாகித் தப்பா மரம்.<br>உவமேயம்: செல்வம் பெருந்தகை யான்கண் படின்.<br>உவம உருபு: அற்று (வெளிப்பட்டு வந்துள்ளது) | 1<br>2<br>1 |
| 40 | **அ) 'மகள் நிலை உரைத்தல்'**<br>❖ **துறை விளக்கம்:** "மகள் நிலை உரைத்தல்" என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை "மனைமருட்சி"என்றும் கூறப்படும்.<br>❖ **சான்று:** "பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்……" எனத்தொடங்கும் நற்றிணைப் பாடல்<br>❖ **சான்று பொருத்தம்:** "நம் வீட்டில் பொற்கிண்ணத்தில் ஏந்திய தேன் கலந்த பால் உணவை வேண்டாம் என மறுத்தவள் நம் மகள். தற்போது, தான் மணந்துகொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பார்க்காமல், கிடைக்கும் உணவினை ஒருபொழுது மட்டும் உண்டு வாழும் இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறைகளையும் எப்படிக் கற்றாள்?" எனச் செவிலித்தாய், நற்றாயிடம் கூறுகிறாள். | 2<br>1<br>1 |
| | **(அல்லது)** | |
| | **ஆ) "இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது" துறையைச் சான்றுடன் விளக்குக.**<br>❖ **துறை விளக்கம்:** தலைவியை மணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்தும் தலைவனிடம், "தலைவியை விரைந்து மணம் செய்து கொள்வாயாக" எனத் தோழி சொல்லியது.<br>❖ **சான்று:** "பெருங்கடல் முகந்த........" எனத் தொடங்கும் அகநானூற்றுப்பாடல்.<br>❖ **சான்று பொருத்தம்:** களவு வாழ்க்கையில் விருப்பம் கொண்ட தலைவன், தலையைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்தி வருகிறான். சிறைப்புறமாகத் தலைவியைச் சந்திக்க வந்த தலைவனிடம், மழையைச் சுட்டிக்காட்டி, மேகங்களின் ஆரவாரம் போல ஊராரும் அலர் தூற்ற ஆரம்பித்துவிட்டனர். ஆகவே விரைந்து மணம் செய்து கொள்வாயாக எனத் தோழி, தலைவனிடம் சொல்லியது. | 2<br>1<br>1 |
| 41 | **மொழி முதல், இறுதி எழுத்துகள்**<br>❖ மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் 22. அவை, உயிரெழுத்துகள் - 12 (அ முதல் ஔ முடிய), மெய்யெழுத்துகள் - 10 (க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ்)<br>❖ **எ.கா: உயிர் 12** - அம்மா, ஆடு, இலை, ஈட்டி, உரல், ஊதல், எலி, ஏணி, ஐவர், ஒன்று, ஓடம், ஔவை<br>**மெய் 10** -கண், ஙனம், சங்கு, ஞாலம், தலை, நாய், படம், மரம், யானை, வண்டு<br>❖ மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் 24. அவை, உயிரெழுத்துகள் - 12 (அ முதல் ஔ முடிய) மெய்யெழுத்துகள் -11 (ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்) குற்றியலுகரம் -1<br>❖ **எ.கா: உயிர் 12** - பல, பலா, கிளி, தீ, கொடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ,<br>**மெய் 11** - உரிஞ், கண், பொருந், மரம், மான், பாய், வேர், வேல், தெவ், வீழ், வாள்<br>**குற்றியலுகரம் 1** - எஃகு. | 2<br>2 |
| 42 | **கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.**<br>❖ தமிழில் பொருள் இலக்கணம் இரண்டு வகைப்படும். அவை, அகப்பொருள் புறப்பொருள் என்பன. அகப்பொருள் மூன்று பிரிவுகளைக் கொண்டது. அவை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன. முதற்பொருள், நிலம், பொழுது என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. பொழுது இரண்டு வகைப்படும். அவை, சிறுபொழுது, பெரும்பொழுது என்பன. | 4 |
| 43 | **இலக்கிய நயம் பாராட்டுக.**<br>மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். | 1+1<br>1+1 |
| | **பகுதி – IV** | **3×6=18** |
| 44<br>அ) | **கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகள்**<br>❖ ஊருக்கு உதவி வாழ்தலே ஒப்புரவாகும். விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.<br>❖ உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகின்றவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.<br>❖ பெருந்தகையாளரிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது. | 2<br>2<br>2 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

| | | |
|---|---|---|
| 44<br>ஆ) | **மதீனா நகரம் ஒரு வளமான நகரம்**<br>❖ ***மாளிகை நகரம்:*** மேருமலை போன்று மதீனா நகரத்து மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடித் தெருக்களில் எழுந்த ஒலி பெருங்கடல் ஒலி போன்றிருந்தது. வீதிகள் பரந்தும், மாளிகைகள் இடைவெளி இன்றி நெருக்கமாகவும் இருந்தன.<br>❖ ***கொடை நகரம்:*** வாரி வழங்கும் வள்ளல்களைவிடப் பெரும் புகழுடைய பொருள் வளத்தைக் கொண்டது மதீனா நகரம்.<br>❖ ***பொன்னகரம்:*** காடுபோல் நெருங்கியிருந்த தோரணங்களாலும், கொடிகளாலும், மலை போன்ற யானைகளாலும் முழுமைபெற்ற பொன்பூமியாய் மதீனா விளங்கியது.<br>❖ ***மனை நகரம்:*** விருந்தாலும், பூக்களாலும் மதீனா நகரம் திருமண வீடுபோல் காட்சியளித்தது.<br>❖ ***மாநகரம்:*** பகை, வறுமை, நோய் நீங்கி, செங்கோல் ஆட்சி நடத்தும் அரசு போல் மதீனா விளங்கியது.<br>❖ ***ஒண்ணகரம்:*** பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களாலும் பொருள் வளத்தாலும் மதீனா ஒளிபெற்றுத் திகழ்கிறது.<br>❖ ***செம்மை நகரம்:*** மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன. வெற்றியும் ஊக்கமும் காய்த்திருந்தன. தீன் என்னும் செல்வம் பழுத்திருந்த செம்மை நகராக இருந்தது.<br>***(எவையேனும் ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)*** | *1*<br>*1*<br>*1*<br>*1*<br>*1*<br>*1* |
| 45<br>அ) | **நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலை**<br>❖ தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிப்பது மொழி. மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என இருவகைப்படும்.<br>❖ பேச்சுமொழி, திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்கிறது.<br>❖ உடம்பின் ஒரு பகுதியாக இருக்கும் தொண்டையிலிருந்து எழும் சொற்கள், குரல் ஏற்ற இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பிச் சொல்லுதல், மௌனம் ஆகியவற்றால் வடிவம் கொடுத்து வெளிப்படுகின்றன.<br>❖ எழுத்து மொழி உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலை கொண்டது.<br>❖ எழுத்து மொழியில் மனிதனின் கை மட்டும்தான் வேலை செய்கிறது. எதிராளி கிடையாது. பேச்சுமொழி நேரடி மொழி. எதிராளியிடம் நேருக்கு நேராய் வெளிப்படுத்தப்படுவது.<br>❖ பேச்சுமொழியில் பழமை தட்டாது. உணர்வுகளுக்குக் குறையில்லை. எப்போதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டு இருப்பதைப் பேச்சு மொழியில் உணரலாம். பேச்சு மொழியே வலிமை வாய்ந்தது.<br>❖ பேச்சுமொழியே ஒரு கவிஞனை நிகழ்காலத்தவனா, இறந்தகாலத்தவனா என நிர்ணயம் செய்யும் ஆற்றலுடையது.<br>❖ பேச்சுமொழியில் ஒரு கவிதையைப் படைக்கின்றபோது, அது உடம்பின் மேல்தோல்போல் உணர்ச்சியுடன் இயங்குகிறது ஆனால், எழுத்து மொழியில் அதே சொற்கள் உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகிறது.<br>***(எவையேனும் ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)*** | *1*<br>*1*<br>*1*<br>*1*<br>*1*<br>*1* |
| 45<br>ஆ) | **'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே'**<br>***(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)*** | *6* |
| 46<br>அ) | **'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு**<br>❖ கதைச் சுருக்கம்; இயற்கை, உயிரினப் பாதுகாப்பு குறித்த கருத்துகள் | *3+3* |
| 46<br>ஆ | **பாரதியின் இதழாளர் முகம்**<br>❖ சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, பாலபாரதி, இந்தியா, விஜயா, சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் ஆசிரியராகவும், துணை ஆசிரியராகவும் பாரதியார் பங்காற்றி உள்ளார்.<br>❖ சர்வஜனமித்திரன், ஞானபாநு, காமன்வீல், கலைமகள், தேசபக்தன் கதாரத்னாகரம் போன்ற இதழ்களில் பாரதி தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.<br>❖ தன்பெயரையும் தன்னையும் முன்னிலைப்படுத்திக்கொள்ள விரும்பும் மனிதர்களுக்கிடையில் "தான்" என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி.<br>❖ தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் இவரே.<br>❖ ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டும் கருத்துக்கள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணி காளிதாசன், ஷெல்லிதாசன், சக்திதாசன், காசி எனப் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.<br>❖ தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் குறிப்பிடும் முறையை முதன்முதலில் கையாண்டார்.<br>❖ தமிழில் தலைப்பிடுவதற்கும் இவரே முன்னோடி. தமிழில் தலைப்பிடலை 'மகுடமிடல்' என்றே கூறினார்.<br>❖ பாரதி, இந்தியா இதழைச் சிவப்பு வண்ணத்தில் வெளிட்டார். அதனால் இதழியல் துறையில் புதுமைநோக்கும், விடுதலைப் புரட்சியும் கொடிகட்டிப் பறந்தன.<br>***(எவையேனும் ஆறு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)*** | *1*<br>*1*<br>*1*<br>*1*<br>*1*<br>*1* |
| | **பகுதி – V** | **4+2=6** |
| 47<br>அ) | *உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்*<br>*அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்*<br>*தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!*<br>*துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*<br>*புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்*<br>*உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;*<br>*அன்ன மாட்சி அனையர் ஆகித்*<br>*தமக்கென முயலா நோன்தாள்*<br>*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.* | |
| 47<br>ஆ) | வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க<br>சொல்லேர் உழவர் பகை | |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத் தேர்வு - 2023

வகுப்பு : 11 **பொதுத்தமிழ்** பதிவு எண் :

காலம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்** 14x1=14

1. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
................ இல்லது பனுவல் அன்றே
அ) பனுவல் ஆ) பாயிரம் இ) பாடல் ஈ) காவியம்

2. கவிஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுப்பு ....................
அ) புல்லின் இதழ்கள் ஆ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
இ) தமிழின் கவிதையியல் ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக

3. முல்லைத் திணை பாடுவதில் வல்லவர் ..........................
அ) கபிலர் ஆ) ஓரம்போகியார் இ) பேயனார் ஈ) அம்மூவனார்

4. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் ......................
அ) மார்ச் 20 ஆ) ஏப்ரல் 20 இ) மே 20 ஈ) ஜீன் 20

5. தமிழ்நாட்டின் மாநில மரம் ..................
அ) வாழை ஆ) பலா இ) தென்னை ஈ) பனை

6. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்
விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்றும் சரி விளக்கமும் சரி ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

7. "ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூல்களை எரித்தால் போதும், அவர்கள் அறிவு மேலும் வளர்வதற்கு முடியாமல் நின்றுவிடும்" எனக் கூறும் நூல் ......................
அ) ஃபாரன்ஹீட் 541 ஆ) ஃபாரன்ஹீட் 451 இ) ஃபாரன்ஹீட் 154 ஈ) ஃபாரன்ஹீட் 415

8. ஒப்பரவு என்பதன் பொருள் ..........................
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

9. தொல்காப்பியத்தில் உள்ள இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

10. குளிரும் <u>மந்தையும் கொண்டலும்</u> காக்கும் – தடித்தச் சொல்லின் இலக்கணக் குறிப்பு.
அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

11. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ..................
அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) நற்றிணை

12. சரியானதைத் தேர்ந்தெடுக்க
அ) வரை–மலை ஆ) வதுவை–திருமணம் இ) வாரணம்–யானை ஈ) புடவி–கடல்
i) அ, ஆ, இ–சரி; ஈ–தவறு ii) ஆ, இ, ஈ – சரி; அ–தவறு
iii) ஆ, இ, ஈ – சரி; ஆ–தவறு iv) அ,ஆ, ஈ – சரி; இ–தவறு





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

13. பொருத்துக.

அ) நேரிசை ஆசிரியப்பா – i) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா – ii) அடிகளை மாற்றினாலும் ஓசையும்பொருளும் மாறாது வரும்

இ) நிலைமண்டில ஆசிரியப்பா – iii) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா – iv) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

அ) iii, i,iv, ii ஆ) iv, iii,ii, i இ) ii, iii, iv, i ஈ) ii, i,iv, iii

14. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள். – எண்ணச் சொல்கிறவர்கள் யார் ? எண்ணுபவர்கள் யார் ?

அ) மாணவர்கள், ஆசிரியர்கள் ஆ) ஆசிரியர்கள், மாணவர்கள்

இ) பெற்றோர்கள் குழந்தைகள் ஈ) கவிஞர்கள் மாணவர்கள்

## பகுதி -II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது ?
16. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது ?
17. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை ?
18. புதுக்கவிதை விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x2=4

19. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன ?
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது ?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழுனுக்கு விடை தருக.** 7x2=14

22. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) வாழ்வான் ஆ) பிரிந்தோர்
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பூஞ்சோலை ஆ) செங்கயல்
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
தேர்வெழுத வேகமாய் போங்க. நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
கனை, கணை
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) தங்கை (அல்லது) ஆ) வைகை
29. விகுதிகள் எவற்றை உணர்த்தும் ?
30. கலைச்சொல்லாக்கம் தருக. அ) Migration ஆ) Culture





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி -III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது ?
32. காற்றின் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது ? ஏன் ?
33. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
34. "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

35. வாளினும் வலிமை பெற்றது மொழி – விளக்குக.
36. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x4=12

39. அ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)


ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பொருந்தகை யான்கண் படின். – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. அ) "மகள் நிலை உரைத்தல்" துறையைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

ஆ) "இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது" என்னும் துறையைச் சான்று தந்து விளக்குக.

41. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை ? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.
42. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.








Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

43. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ ? வெண்ணிலாவே!

- கவிமணி

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கு விடை தருக.** 3x6=18

44. அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும்நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

46. அ) 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை ?

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

அ) 'உண்டால் அம்ம ..................' எனத் தொடங்கும் புறநானூறுப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'வில்லேர் ..................' எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

*******





Kindly send me your study materials to padasalai.net@gmail.com